நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். குத்தாலம் தொகுதி, திருவாரூர் மாவட்டம், குடவாசல் ஒன்றியம், ஒன்றியத்தினுடைய கடைசிப் பகுதியில் அமைந்திருக்கக்கூடிய காங்கேயம் நகரம் ஊராட்சியில் ஒரு புதிய ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டுமென்று நீண்ட நாட்களாகவே கோரிக்கை இருந்து வருகிறது. காங்கேயம் நகரம், ஓலையமங்கலம், ஆலடி கருப்பூர், மேலப்பாலையூர் ஆகிய பல்வேறு ஊராட்சிகளில் இருக்கக்கூடிய 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள்தொகை பயன்பெறக்கூடிய அந்த ஆரம்ப சுகாதார நிலையம் அருகில் எவ்விதமான அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களோ, மருத்துவமனைகளோ குறைந்தது 10 கிலோ மீட்டருக்கு இடையில் இல்லை. இதைச் சென்ற ஆண்டும் கோரிக்கையாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே சொல்லியிருக்கிறோம். இந்த ஆண்டும் மனுவாகக் கொடுத்திருக்கிறோம். ஆகவே, இந்த ஆண்டு அந்தப் பகுதி மக்களினுடைய நீண்ட நாள் கோரிக்கையாக இருக்கக்கூடிய காங்கேயம் நகரத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை, விதிமுறைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 134, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. எதிரொலி மணியன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

134—

மாணவர் விடுதி

***92012—திரு. கோ. எதிரொலி மணியன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2010 மே 4]

(அ) பெரணமல்லூர் தொகுதி, வடமாதிமங்கலம் கிராமத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் ்விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பெரணமல்லூர் தொகுதியில், வடமாதிமங்கலம் கிராமத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைப்பது தொடர்பான கருத்துரு எதுவும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. எதிரொலி மணியன்.

திரு. கோ. எதிரொலி மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடமாதிமங்கலம் அரசு மேல்நிலைப் பள்ளியில் சுமார் 1,200 மாணவ, மாணவியர்கள் படித்து வருகிறார்கள். இதில் உள்ளூர் மாணவ, மாணவியர்கள் 200 பேர் போக, சுற்றிலுமுள்ள எட்டிவாடி, ஆலம்பூண்டி, மடவிளாகம், கூடலூர், சதுப்பேரி, மேல்நத்தமேடு, அரியத்தூர், தெற்குமேடு, திருமலை, ஜம்புகோணாம்பட்டு, இராயங்குப்பம் என கிட்டத்தட்ட 10-க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சார்ந்த ஏழை, விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவ, மாணவியர்கள் 5 கிலோ மீட்டர், 8 கிலோ மீட்டர் தூரத்திலிருந்து வந்து படிக்கிறார்கள். அதிலும் குறிப்பாக, 1,200 பேரிலே 800 பேர் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பபட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள். எனவே, அந்தப் பகுதியிலே அவர்கள் நலன் கருதி, ஒரு புதிய பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி தொடங்கிட அமைச்சரை நான் பல முறை வேண்டியிருக்கிறேன். அவர் பரிசீலனை செய்து, நிச்சயம் அதைத் தொடங்க ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

[2010 மே 4

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், என்னிடம் வடமாதிமங்கலத்திற்கு மாணவர் விடுதி வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள், அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. எதிரொலி மணியன்.

திரு. கோ. எதிரொலி மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலிக்கும் என்று சொன்ன அமைச்சருக்கு நன்றியைச் சொல்கிறேன். ஏனென்றால், பரிசீலனை என்றாலே, 'இல்லை' என்று முதல்வர் சொல்லியிருக்கிறார். இருந்தாலும் நான் நம்புகிறேன். தமிழ்நாட்டில் இன்றைக்குப் பல அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு விடுதிகள் திறக்கப்பட்டுள்ளன. அவை அப்போதைய தேவை என்று வழங்கப்பட்டவை. ஆனால் அவற்றில் பல விடுதிகளில் இன்றைக்கு மாணவர்கள் தங்குவதே கிடையாது. காரணம், அவை பேரூராட்சி, நகராட்சியை ஒட்டியிருக்கின்ற காரணத்தினாலே, அரசும் இலவச பஸ் பாஸ் வழங்குகிற காரணத்தினாலே, அவர்கள் எல்லாம் அந்தக் கிராமப்புறப் பள்ளிகளை ஒதுக்கிவிட்டு, நகரத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறார்கள். எனவே, அந்த விடுதிகள் இப்போது காலியாகவே இருக்கின்றன. குறிப்பாக, என் தொகுதியிலே ஒரு விடுதி, நெடுங்குனம் என்கிற கிராமத்திலே ஒரு பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி இருக்கிறது. அதில் இருப்பவர்கள் மொத்தம் 15 பேர்தான், ஆனால் தங்குபவர்கள் 5 பேர்தான். அந்த விடுதி தேவையேயில்லை. அதற்குப் பதிலாக அந்த விடுதியை இங்கே மாற்றித் தரலாம். எனவே, தேவை ஏற்பட்டால், தேவை இல்லாததை மாற்றி புதிய இடத்திலே தருவதற்கு அமைச்சர் ஆவன செய்வாரா? இதன் மூலமாகத் தமிழ்நாட்டிலே பல விடுதிகள் புதியதாக இயக்க வாய்ப்பிருக்கிறது. தேவையற்ற இடங்களிலே நீக்கிவிட்டு, தேவையான பகுதிகளுக்கு வழங்குவதற்கு அமைச்சர் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே 125 இடங்களைத் தவிர, மீதியுள்ள அத்தனை இடங்களிலும் மாணவர்கள் விடுதிக் கட்டடங்களை அரசு கட்டியிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு

2010 மே 4]

உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல அங்கிருந்து மாற்றுவதைவிட, அவர் கேட்கிற வடமாதிமங்கலத்திற்கு விடுதி தருவதற்கு வேண்டிய முயற்சிகள் எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. சின்னப்பன்.

திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளாத்திகுளம் தொகுதி, சிவஞானபுரத்தில் அரசு உயர்நிலைப் பள்ளி 21 வருடங்களாகத் தொடர்ந்து 10 ஆம் வகுப்புத் தேர்வில் மாநிலத்திலே எந்தப் பள்ளிகளும் இல்லாத அளவிற்கு 100 சதவீதம் தேர்ச்சி பெற்று வருகிறது. 1,000 மாணவ, மாணவியர்கள் படித்து வருகிறார்கள். அத்தோடு, அங்கு படிக்கின்ற 1,000 மாணவ, மாணவியர்களில் 80 சதவீதம் பேர் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர்கள் படிக்கிறார்கள். ஆகையால் இந்த அரசு அங்கே ஒரு பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி அமைக்குமா என்று தங்கள்மூலம் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி தேவை என்பதை நானும் அறிவேன். அரசு உரிய முறையிலே பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 135, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

135—

மக்கள் நீதிமன்றம்

***10450—திரு. இரா. இராஜேந்திரன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தொழிலாளர் நீதிமன்றங்களில் வழக்குகளை விரைந்து முடிக்க மக்கள் நீதிமன்றம் அமைத்திட அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்:

TRUTH ALONE TRIUMPHS